විද්‍යා සහ තාක්ෂණ අමාත්‍යාංශය
விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அமைச்சு
Ministry of Science and Technology





# 2024



# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
# வருடாந்த செயல்திறன் அறிக்கை
# Annual Performance Report

# வருடாந்த செயல்திறன் அறிக்கை
# 2024

**விஞ்ஞான மற்றும் தொழினுட்ப அமைச்சு**

# விஞ்ஞான மற்றும் தொழினுட்ப அமைச்சு

## செலவினத் தலைப்பு இல. - 126

**உள்ளடக்கம்** **பக்க இல.**


| | | | |
|---|---|---|---|
| அத்தியாயம் 01 | - | நிறுவன சுய விபரம்/நிர்வாக சுருக்கம் | 01 |
| அத்தியாயம் 02 | - | முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம் | 06 |
| அத்தியாயம் 03 | - | 2024 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான ஒட்டு மொத்த நிதிச் செயலாற்றுகை அத்தியாயம் | 15 |
| அத்தியாயம் 04 | - | செயலாற்றுகை சுட்டிகள் | 20 |
| அத்தியாயம் 05 | - | அடையக்கூடிய நிலையான வளர்ச்சி இலக்குகளின் செயல்திறன் (SDG) | 21 |
| அத்தியாயம் 06 | - | மனித வளம் பற்றிய விபரக்குறிப்பு | 23 |
| அத்தியாயம் 07 | - | இணக்க அறிக்கை | 25 |

# அத்தியாயம் 01

## நிறுவன சுய விபரம்/நிர்வாக சுருக்கம்

### 1.1. அறிமுகவுரை

இலங்கை பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை சாதித்தல் போன்றவை தொடர்பில் தேவையான பணிகளினை ஆற்ற வேண்டிய பாரிய பொறுப்பானது விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் புத்தாக்கத் துறை கொண்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில், கல்வி அமைச்சின் கீழ் உள்ள ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவாக செயற்பட்டு கிட்டத்தட்ட 10 மாதங்களுக்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முயற்சிகளை மேற்கொண்டதன் பின்னர் 2024 ஆம் ஆண்டில், 2412/08 எனும் இலக்கத்தினையும் 25.11.2024, எனும் திகதியினையும் கொண்ட வர்த்தமானியின் மூலம் விஞ்ஞான மற்றும் தொழினுட்ப அமைச்சாக நிறுவப்பட்டதன் ஊடாக மேற்கூறிய பணிகளை மிகவும் விரிவான மற்றும் திறமையான முறையில் செயல்படுத்த அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது

இதன்படி, புதிய அமைச்சின் வரம்பிற்குள் உள்ளடங்கும் நிறுவனங்களின் எதிர்கால விவகாரங்களை நிர்வகிப்பதற்கும் வழிநடத்துவதற்கும் 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள் நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்ட நிர்வாகக் குழுக்களை நியமிக்க கூடியதாக இருந்தது. இதன் விளைவாக, "ஒரு வளமான நாடு - ஒரு அழகான வாழ்க்கை" என்ற கொள்கை அறிக்கையின்படி, தேசிய பொருளாதாரத்திற்கு நேர்மறையான பங்களிப்பை வழங்கி, மக்கள் சார்பானதாக, நிறுவனங்களின் அடிப்படை நடவடிக்கைகளை புதிய வழியில் எளிதாக்க அமைச்சினால் முடிந்தது.

2024 ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் 10 நிறுவனங்களும் ஆண்டின் இறுதிக்குள் 12 நிறுவனங்களும் இந்த அமைச்சின் கீழ் இயங்கி வந்ததோடு 2024 ஆம் ஆண்டில் அமைச்சு மற்றும் நிறுவனங்களால் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளின் சுருக்கத்தை பின்வருமாறு முன்வைக்கலாம்.

தேவை சார்ந்த ஆராய்ச்சியை ஊக்குவித்தல், தொழில் ஆராய்ச்சி மற்றும் கூட்டாண்மைகளை வலுப்படுத்துதல், தொழினுட்ப அடிப்படையிலான தொழில்முனைவு மற்றும் புதுக்கண்டுபிடிப்புக்களுக்கான சூழல்களை உருவாக்குதல் மற்றும் அதற்கேற்ப செயல்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை செயல்படுத்துதல் ஆகியவற்றுக்கான மூலோபாயத் திட்டங்களை உருவாக்குவதில் நிறுவனங்களுக்கு ஆதரவு வழங்கப்பட்டது. மேலும், நிறுவனங்களின் நிர்வாக மற்றும் செயல்பாட்டு நடவடிக்கைகளுக்கு அமைச்சானது மிகவும் அர்ப்பணிப்புடன் செயல்பட்டது, அவற்றில், SLINTEC மற்றும் SLIBTEC க்கு இடையிலான சொத்துக்களின் பகிர்வு, நிறுவனங்களின் நில உரிமைகளைத் தீர்ப்பது ஆகியவை முதன்மையான இடத்தைப் பிடித்தன. மேலும், அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் ஆராய்ச்சி முடிவுகளை வணிகமயமாக்குவதற்குத் தேவையான மன்றங்களை நிறுவி ஒருங்கிணைப்பு மூலம் ஒரு புத்தாக்க சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதில் அமைச்சினால் குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்யப்பட்டது.

இந்த நோக்கத்திற்காக, 50 ஆண்டுகள் பழமையான கட்டிடங்கள் மற்றும் நிலத்தை உறுதிப்படுத்த தடுப்புச் சுவர்களைக் கட்டுவதன் மூலம் NIFS இன் ஆராய்ச்சி உள்கட்டமைப்பைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

விஞ்ஞான மற்றும் தொழினுட்பத் துறைகள் தொடர்பில் வளர்ந்து வரும் சர்வதேச உறவுகளைப் பொறுத்தவரை, அமைச்சானது இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா, கியூபா, நேபாளம் மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களுக்கு அமைவுற, உலகளாவிய பங்குதாரர்களுடன் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த நடவடிக்கைகளினை எடுத்துள்ளது. இந்திய-இலங்கை இருதரப்பு ஒத்துழைப்பு ஆராய்ச்சித் திட்டங்களின் கீழ் தற்போது விவசாயத் துறை தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் கண்டறிதல் தொடர்பில் முன்னெடுக்கப்படும் ஆராய்ச்சி, நாட்டின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். மற்றும் இரு நாடுகளுக்கும் இடையில் புதிய ஆராய்ச்சி ஒத்துழைப்புகளைத் தொடங்குவதற்கான ஆரம்ப பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆராய்ச்சி தகவல் அமைப்பை நிறுவுவது அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்ட முதன்மைப் பொறுப்பாகும், மேலும் ஒரு தேசிய ஆராய்ச்சி முகாமைத்துவ தகவல் அமைப்பை நிறுவுவதற்கான ஒரு முன்மாதிரி உருவாக்கப்பட்டது.

கிராமப்புற மட்டத்தில் வளர்ந்து வரும் தொழில்முனைவோரின் சந்தை அணுகலை விரிவுபடுத்துவதற்கும் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் 267 விதாதா வள மையங்கள் மூலம் நாடு முழுவதும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. மேலும், விஞ்ஞான மற்றும் தொழினுட்ப

அமைச்சின் கீழ் செயல்பாடுகள் தொடங்கப்பட்டதன் மூலம், புத்தாக்க துறையின் அனுகூலங்கள் நியாயமான அணுகுமுறையுடன் திட்டமிடப்பட்டுள்ளன.

வானியல் தொடர்பான அறிவு மற்றும் அனுபவத்தை பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அண்மித்தாக கொண்டுவருவதற்கான அதன் சிறந்த பணியை நிறைவேற்றுவதில் இலங்கை கோள்மண்டலம் வெற்றி பெற்றுள்ளது, மேலும் 2024 ஆம் ஆண்டில் அதன் கோளரங்கக் கண்காட்சிகள் மற்றும் வெளிப்புற நிகழ்ச்சிகள் மூலம் ரூ.25.12 மில்லியன் வருமானத்தை இலங்கை கோள் மண்டலம் ஈட்ட முடிந்தது.

அமைச்சின் மேற்பார்வையின் கீழ் தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் ஒரு திட்டமான உயிரி படல உயிரி உரங்கள் (BFBF), திட்டத்தின் வளர்ச்சி மற்றும் வணிகமயமாக்கல் மூலம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை தொடர்ந்து அடைந்து வருகிறது.பாரம்பரிய உரங்களுக்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு உகந்ததும் தேசிய அளவில் பயன்படுத்தக்கூடியதுமான உயிர்ப்படலம் உயிர் உரங்களின் பரவலான பயன்பாடு மற்றும் விநியோகம் மற்றும் நிலையான விவசாய நடைமுறைகளை ஊக்குவித்தல் ஆகியவை விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கச் செய்துள்ளது.

தனது மனித வளங்கள் மற்றும் சர்வதேச உறவுகள் மூலமும் மற்றும் தற்போதைய அரசாங்கக் கொள்கைகள் மற்றும் புதிய விஞ்ஞான மற்றும் தொழினுட்பக் கொள்கைகள் என்பனவற்றுக்கு இணைங்கவும் இலங்கையை அடிமட்டம் முதல் சர்வதேச நிலை வரை ஒரு வளமான தேசமாக மாற்றுவதற்குத் திட்டமிடுவதற்குத் தேவையான பின்னணியை அமைச்சு உருவாக்கியுள்ளது.

**1.2**

**நோக்கு** :

**விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் புத்தாக்கத்தின் ஊடாக அபிவிருத்தி அடைந்த ஒரு தேசம்.**

**பணி**

நிலையான அபிவிருத்தி கட்டமைப்பிற்குள் தேசிய மற்றும் உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளும் வகையில் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு ஏற்புடைய பொருளாதார வளர்ச்சியை, தூண்டகூடிய வகையில் பயனுறுதி மிக்க விஞ்ஞான, தொழினுட்ப மற்றும் புத்தாக்க சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குதல்.

### 1.3 விஞ்ஞானம் மற்றும் தொழினுட்ப அமைச்சினால் முன்னுரிமை அளிக்கப்படும் செயற்பாடுகள்

- அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படையில், விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம் மற்றும் நிரல் II இல் பட்டியலிடப்பட்டுள்ள திணைக்களங்கள், சட்டரீதியான நிறுவனங்கள் மற்றும் பொதுக் கூட்டுத்தாபனங்களின் அகப்பாட்டெல்லையின் கீழ்வரும் விடயங்கள் தொடர்பான கொள்கைகள், உத்திகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்குதல், செயல்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- அமைச்சின் கீழ் பொது சேவைகளை திறமையான மற்றும் மக்களுக்கு உகந்த முறையில் வழங்குதல்.
- நவீன முகாமைத்துவ நுட்பங்கள் மற்றும் தொழினுட்பத்தைப் பயன்படுத்தி அனைத்து அமைப்புகள் மற்றும் நடைமுறைகளையும் சீர்திருத்துதல், இதன் மூலம் ஊழல் மற்றும் வீண்விரயத்தை ஒழித்து அமைச்சின் செயல்பாடுகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்தல்.
- சர்வதேச ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்ற ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு வசதி செய்து கொடுத்தல்
- புத்தாக்கங்கள் மற்றும் ஆராய்ச்சியின் விளைவுகளைப் பயன்படுத்துவதற்கு திறமையான பொறிமுறையை உருவாக்குதல்
- விஞ்ஞானம், தொழில்துறை, சமூக மற்றும் பொருளாதார ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை விரிவுபடுத்த நடவடிக்கை எடுத்தல்
- புத்தாக்கங்களினை நோக்கி சமூகங்களை ஊக்குவித்தல் மற்றும் வழிநடத்துதல்
- விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பத் துறையில் நிர்வாகம் தொடர்பான தரநிலைகள் மற்றும் விடயங்களைச் செயல்படுத்துதல்
- பசுமை தொழினுட்பத் திட்டங்களை உருவாக்குவதற்கு தொடர்புடைய அமைச்சுக்களுக்கு தொழினுட்ப உதவி வழங்குதல்.

## 1.4. நிறுவன கட்டமைப்பு




*(*2024.11.25 இல் உள்ளவாறாக முந்தைய அமைச்சினது நிறுவன அமைப்பு (கல்வி அமைச்சின் திறன் விருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவு)*




* *2412/08 எனும் இலக்கத்தினையும் 2024.11.25 எனும் திகதியினையும் கொண்ட அதி விசேட வர்த்தமானிக்கு அமைவுற விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் புதிய நிறுவன கட்டமைப்பு.*

## 1.5. முன்னாள் கல்வி அமைச்சக ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவின் கீழ் உள்ள நிறுவனங்கள்

- நவீன தொழினுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவகம் (ACCIMT)
- தேசிய விஞ்ஞான மற்றும் தொழினுட்ப ஆணைக்குழு (NASTEC)
- தேசிய எந்திரவியல் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (NERDC)
- தேசிய புத்தாக்க முகவராண்மை (NIA)
- தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகம் (NIFS)
- தேசிய ஆராய்ச்சி மன்றம் (NRC)
- தேசிய விஞ்ஞான மன்றம் (NSF)
- ஸ்ரீலங்கா இன்ஸ்டியூட் ஒப் பயோ டெக்னோலஜி (SLIBTEC)
- இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு (SLIC)
- இலங்கை நனோ தொழினுட்ப நிறுவகம் (SLINTEC)
- கைத்தொழில் தொழினுட்ப நிறுவகம் (ITI)
- இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனம் (SLSI)

* 25.11.2024 திகதியினையும் 2412/08 எனும் இலக்கத்தினையும் கொண்ட கொண்ட அதிவிசேட வர்த்தமானிக்கு அமைவுற விஞ்ஞானம் மற்றும் தொழினுட்ப அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்ட புதிய நிறுவனங்கள்.

## 1.6. வெளிநாடுகளிலிருந்து நிதியீடு செய்யப்பட்ட கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள்

ஏற்புடையதல்ல.

# அத்தியாயம் 02

## முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

### 2.1. 2024 ஆம் ஆண்டில் விஞ்ஞான மற்றும் தொழினுட்பவியல் அமைச்சின் அடைவுகள்

**விஞ்ஞான மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம்**

- **விஞ்ஞான மற்றும் தொழினுட்ப பிரபல்யப்படுத்துகை நிகழ்ச்சித்திட்டம்**

பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட இலங்கையர்களிடையே விஞ்ஞான கல்வியறிவை மேம்படுத்துவதற்காக விஞ்ஞான மற்றும் தொழினுட்ப அறிவை நாட்டில் மேம்படுத்துவது அமைச்சின் ஆராய்ச்சிப் பிரிவின் பணியாகும்.

2024 ஆம் ஆண்டின் தேசிய விஞ்ஞான வார கொண்டாட்டங்களாவன, அமைச்சின் அகப்பாட்டெல்லையின் கீழ் உள்ள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களுடன் இணைந்து ஒருங்கிணைக்கப்பட்டன. அதன்படி, தேசிய விஞ்ஞான மன்றமானது, கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் கேட்போர் கூடத்தில்,2024ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதியன்று பிற நிறுவனங்களுடன் இணைந்து, ஒரு தேசிய நிகழ்வாக "பாடசாலை விஞ்ஞான ஆராய்ச்சி கருத்தரங்கை" ஏற்பாடு செய்துதிருந்தது. தேசிய விஞ்ஞான வார கொண்டாட்டத்துடன் இணைந்து, மற்ற நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட திறந்த நாட்கள், மாநாடுகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், கண்காட்சிகள் போன்ற 18 நிகழ்ச்சிகளை அமைச்சு ஒருங்கிணைத்தது.

கல்வி அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களினால் பள்ளி சமூகத்தினரிடையே பல்வேறு வகையான அறிவுப் பரவல் திட்டங்களை ஊக்குவிப்பதற்கும் வசதி செய்வதற்கும் கல்வி அமைச்சகத்துடன் ஆரம்பக் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக, வரும் ஆண்டில் இரு அமைச்சகங்களின் பங்கேற்புடன் ஒரு கூட்டுத் திட்டம் ஏற்பாடு செய்யப்படும்.

- **இருதரப்பு மற்றும் பலதரப்பு ஒத்துழைப்பின் கீழ் விஞ்ஞான மற்றும் தொழினுட்ப ஒத்துழைப்பு**

  - **இலங்கைக்கான இந்திய விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி உபகார பரிசில் (ISRF) திட்டம்**

இந்த திட்டத்தின் நோக்கமானது, அண்டை நாடுகளான ஆப்கானிஸ்தான், வங்கதேசம், பூட்டான், மாலைத்தீவு, மியான்மர், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு, பொறியியல் மற்றும் மருத்துவ விஞ்ஞானம் உள்ளிட்ட அனைத்து முக்கிய விஞ்ஞான மற்றும் தொழினுட்பத்துறைகளிலும் சமகால ஆராய்ச்சிப் பகுதிகளில் பணியாற்ற வாய்ப்புகளை வழங்குவதாகும்.

2023/2024 ISRF நிகழ்ச்சித் திட்டத்திற்கான அழைப்பானது 2024.05.01 அன்று பெறப்பட்டதுடன் இது பற்றிய விளம்பரம் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அமைச்சின் வலைத்தளத்தில் வெளியிடப்பட்டது. 2024 ஆம் ஆண்டிற்கான உபகார பரிசில் எண்ணிக்கையைக் கோரி இந்தியத் தரப்பிற்கு மூன்று நினைவூட்டல்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

  - **இந்திய - இலங்கை கூட்டு ஒத்துழைப்பு திட்டம்**

2019 ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட இந்திய-இலங்கை கூட்டு ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ், விஞ்ஞான அறிவு பரிமாற்றம், இருதரப்பு மாநாடுகளை ஏற்பாடு செய்தல், இளம் விஞ்ஞானிகளுக்கு பயிற்சி அளித்தல், ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிடுதல் மற்றும் காப்புரிமைகளை வழங்குதல் ஆகியவை இது தொடர்பிலான முன்முயற்சிகளில் அடங்கும்.

2024 நிதி ஒதுக்கீடுகளாவன 08 ஆராய்ச்சித் திட்டங்கள் மற்றும் ஒரு பட்டறைக்கு வழங்கப்பட்டன, இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் முன்னேற்ற மதிப்பாய்வுகள் முறையே 2024.03.22 மற்றும் 2024.10.29 ஆகிய திகதிகளில் நடைபெற்றன.கரும்பில் ஏற்படும் வெள்ளை இலை நோயைக் கட்டுப்படுத்துவது குறித்த ஒரு பட்டறையானது பெலவத்த கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தில் நடத்தப்பட்டது, இதில் இரு நாடுகளைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களும் கலந்து கொண்டனர், மேலும் இந்த பட்டறையின் முடிவில் பெறப்பட்ட பெறுபேறுகளாவன விவசாயிகளுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டன. வாகனத் தொடர்புகளுக்கான ஒருங்கிணைந்த பல-தரநிலை ஆண்டெனாக்கள் (integrated multi-standard antennas for automotive communications) குறித்த ஆராய்ச்சி வெளியீடானது வணிகமயமாக்கலுக்காக தேசிய புத்தாக்க முகவராண்மைக்கு அனுப்பப்பட்டது. இந்தத் திட்டமானது, 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 26 இதழ் கட்டுரைகளை வெளியிடுவதற்கும், நான்கு எம்பில் மாணவர்களுக்கு ஆதரவளிப்பதற்கும் உதவியது.

மதிப்பீட்டு நடைமுறை மற்றும் காலக்கெடு உருவாக்கப்பட்டு, பெறப்பட்ட 430 திட்டங்களுக்கு மதிப்பாய்வு தொடங்கப்பட்டது.

- **ஐரோப்பிய அணு பௌதீகவியல் அமைப்பில் (CERN) உயர் ஆற்றல் பௌதீகவியல் குறித்த முனைவர் பட்டப்படிப்பு**

இலங்கையின் இளம் விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு உபகார பரிசில்களினை வழங்கும் நோக்கில் ஐரோப்பிய அணு பௌதீகவியல் அமைப்புடன் (CERN) இது தொடங்கப்பட்டது. அதன்படி, 2018 - 2024 வரை 04 பட்டப்பின்படிப்பு மாணவர்களுக்கு CERN இல் தங்கள் முனைவர் பட்டப் படிப்புகளை கற்க வாய்ப்பு வழங்கப்பட்டது. முதல் கருத் திட்ட சுழற்சிக்கான காலம் 2025 இறுதி வரை நீட்டிக்கப்பட்டது.

பட்டப்பின்படிப்பு கல்வி கற்ற 04 மாணவர்களுக்கு CERN-இல் அவர்கள் முனைவர் பட்டப் படிப்பைத் தொடர தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. CERN-க்கு செலுத்தப்படவேண்டிய கட்டாயக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டன, மேலும் நாட்டின் நிதி நிலை உறுதியாகியவுடன் செலுத்தப்பட உள்ள 02 விலைவிவரப்பட்டியல்களும் செலுத்தப்படும். உயர்தர மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை இலக்காகக் கொண்டு CERN மற்றும் துகள் பௌதீகவியல் குறித்து தயாரிக்கப்பட்ட காணொளிகள் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன.அடுத்த (இரண்டாவது) சுழற்சிக்கு (நிதி கிடைக்கப்பெற்றால்) NPD மற்றும் அமைச்சரவை ஒப்புதலைப் பெறுவதற்கு முன்னர், பிஎச்டி பட்டம் பெற்ற 04 கல்விமான்களும் இறுதி ஆய்வறிக்கையினை சமர்ப்பித்தல் அவசியமாகும். ஜெனீவாவில் உள்ள ஐ.நா.வுக்கான தூதர், CERN உடன் மீண்டும் சம்பந்தப்படுத்தல் குறித்து வினவினார். அதன்படி, கட்டணம் செலுத்தாத வாய்ப்புகள்/உயர்கல்வி உதவித்தொகைகளைக் கண்டறிய உயர்கல்விப் பிரிவின் உதவி 27.08.2024 அன்று கோரப்பட்டது.27.08.2024 அன்று செலுத்த முடியாத வாய்ப்புகள்/உயர் கல்வி உதவித்தொகைகளைத் தேடுவதற்காக உயர்கல்விப் பிரிவின் உதவி கோரப்பட்டது. 2025 ஆம் ஆண்டிற்கான CERN ஆசிரியர் பயிற்சித் திட்டங்கள் பற்றிய தகவல்கள் கல்வி அமைச்சின் வெளிநாட்டு முகவராண்மைகள் மற்றும் வெளிவிவகாரப் பிரிவுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டன, அவை இடைநிலைக் கல்வியில் உள்ள ஆசிரியர்களுக்கு விநியோகிக்கப்படும்.

- **ஏற்கனவே கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoUs) மற்றும் முன்முயற்சிகள்**

| | |
|---|---|
| இந்தியா | இந்திய-இலங்கை கூட்டு ஆராய்ச்சித் திட்டம், தொடர்பிலான ஆராய்ச்சி முன்மொழிவுகளுக்கான அழைப்புக்கான விளம்பரம் மற்றும் அதற்கான வடிவம் ஆகியன இரு நாடுகளாலும் 2024.06.01 அன்று வெளியிடப்பட்டது. இலங்கை தரப்பில் இருந்து பெறப்பட்ட 448 ஆய்வு முன்மொழிவுகள் உட்பட இரு தரப்பிலிருந்தும் பெறப்பட்ட மொத்த முன்மொழிவுகளின் எண்ணிக்கை 431 ஆகும், மேலும் அவை 2024.10.21 அன்று மதிப்பீட்டிற்காக ஆய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டன. இவை 2024.07.31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலும், 01.09.2024 அன்று பட்டறை முன்மொழிவுகளுக்கான அழைப்பு விடுக்கப்பட்டது, இவை சமர்பிக்கப்படுவதற்கான இறுதி திகதி 15.10.2024 ஆகும். 208 பட்டறை முன்மொழிவுகள் பெறப்பட்டு, 11.11.2024 அன்று மதிப்பீட்டிற்காக ஆய்வுப் பிரிவுக்கு அனுப்பப்பட்டன. |
| சீனா | வுஹான் பாலிடெக்னிக் பல்கலைக்கழகத்துடன் இணைந்து கூட்டு ஆய்வகம் ஒன்றினை நிறுவுதல். |
| தென்னாபிரிக்கா | முதலாவது,JCM ஆனது 09.05.2024 அன்று மெய்நிகர் அடிப்படையில் இடம்பெற்றது.<br>தென்னாபிரிக்கா - இலங்கை கூட்டாண்மைகளை ஏற்படுத்துவதற்காக மெய்நிகர் கூட்டங்கள் கூட்டப்பட்டன.<br>• நனோ தொழினுட்பம் - **17.07.2024 (SLINTEC - Mintek)**<br>• புத்தாக்கம் - **31.07.2024 (NIA - TIA)**<br>• உணவு, விவசாயம் மற்றும் தண்ணீர் முகாமைத்துவம் - **28.10.2024 (NIFS - CSIR/ TIA)** |
| **கியூபா** | 29.05.2024 அன்று கியூபா நாட்டின் அதிமேதகு தூதருடனான சந்திப்பு. அந்த சந்திப்பின் போது கியூபா நாட்டின் விஞ்ஞான மற்றும் தொழினுட்ப மற்றும் சுற்றாடல் அமைச்சுடன் இணைந்து பணியாற்றுவதற்கான ஒரு கருத்துரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இது தொடர்பிலான கியூபா நாட்டின் துலங்கள் 22.07.2024 அன்று பெறப்பட்டது.<br>எமது மேலதிக தேவைகள் கியூபா தரப்பிற்கு 16.08.2024 அன்று தெரிவிக்கப்பட்டது.<br>எ.கா. • கரும்பு ஆராய்ச்சி ஒத்துழைப்பு |

| | |
|---|---|
| | • தடுப்பூசிகளை மேம்படுத்துதல்<br>**இற்றைப்படுத்தல்கள் எதிர்பார்க்கப்படுகிறது.** |
| நேபாள் | நேபாளம் - இலங்கை முதல் JCM: - கருத்துரு அறிக்கை 09.04.2024 அன்று வெளிவிவகார அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. கடைசி நினைவூட்டல் 09.11.2024 அன்று வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. |
| **தாய்லாந்து** | இலங்கையின் விஞ்ஞானம், தொழிநுட்பம் மற்றும் புத்தாக்க நிறுவனங்களுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பத் திணைக்களங்களுக்கு இடையில் ஒத்துழைப்பைக் கட்டியெழுப்புமாறு தாய்லாந்து தூதரகத்திடம் 20.09.2024 அன்று கோரிக்கை விடுக்கப்பட்டது.இலங்கையின் STI நிறுவனங்களுடன் ஒத்துழைப்பை உருவாக்குவதற்காக ஆசிய தொழினுட்ப நிறுவனத்துடன் (AIT) 15.10.2024 அன்று ஒரு முறைசாரா கூட்டம் நடைபெற்றது, மேலும் ஒரு கருத்துரு அறிக்கை பகிரப்பட்டது. கலந்துரையாடல்கள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன. |

➢ **ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்திற்கு வசதிகளினை வழங்கள்**

ஆராய்ச்சி வெளிவருவிளைவுகளுக்கான சந்தை ஒன்றினை உருவாக்கும் அதே வேளையில், தேசிய ஆராய்ச்சி கருத்திட்டங்களிலிருந்து தரவைச் சேகரித்தல், பாதுகாத்தல் மற்றும் எளிதாக்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துதல்.

அரசு ஆராய்ச்சி நிறுவனங்களைப் பதிவுசெய்து ஆராய்ச்சித் தரவை நிர்வகிப்பதற்கும், வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்கும், நகல் எடுக்கப்படுவதை தவிர்ப்பதற்கும் ஒரு தேசிய ஆராய்ச்சி முகாமைத்துவ தகவல் அமைப்பு ஒன்றினது முன்மாதிரி இறுதி நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த அமைப்பைச் செயல்படுத்துதல் தொடர்பில் பல்கலைக்கழகங்களுடன் கலந்துரையாடல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன, மேலும் ஆராய்ச்சி மானிய விண்ணப்பங்களுக்கான தளமாக இதைப் பயன்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது.

ஆராய்ச்சிப் பாடத்திற்குப் பொறுப்பான அமைச்சானது, அரசு அதிகாரிகளுக்கு ஆராய்ச்சி கொடுப்பனவுகளை வழங்குவதற்காக, ஆராய்ச்சி முகாமைத்துவ குழு மற்றும் ஆராய்ச்சி மேற்பார்வைக் குழுவைக் ஆகியவற்றினை கூட்டி ஆராய்ச்சி முன்மொழிவுகளை மதிப்பீடு செய்து பரிந்துரைகளை வழங்கும். 2023 ஆம் ஆண்டில், முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை எண். 02/2014 இன் கீழ் 24 ஆராய்ச்சித் திட்டங்கள் கொடுப்பனவுகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்டன, என்பதுடன் மூன்று குழு கூட்டங்கள் நடத்தப்பட்டன. 2024 ஆம் ஆண்டில், 26 கருத்திட்டங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டதுடன், மதிப்பீட்டு செயல்முறையை நெறிப்படுத்த சுற்றறிக்கையின் கீழ் நியமிக்கப்பட்ட அனைத்து ஆராய்ச்சி முகாமைத்துவ குழுக்களுக்கும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன.

2024 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட 177 ஆராய்ச்சித் திட்டங்களின் தரவு தொகுக்கப்பட்டதுடன், தேசிய புத்தாக்க முகவராண்மையுடன் இணைந்து முதற்கட்ட மதிப்பீடுகள் நிறைவு செய்யப்பட்டன. கருத்திட்டங்களின் முன்னேற்றங்கள் குறித்து நிறுவனங்கள் இரு ஆண்டுக்கு ஒரு முறை அறிக்கை செய்தல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டன, மேலும் 2025 ஆம் ஆண்டுக்கான ஆராய்ச்சித் திட்டத்தைத் தயாரிப்பதற்கான காலம் மற்றும் இலக்குகள் உள்ளிட்ட வழிகாட்டுதல்கள் என்பன வழங்கப்பட்டன.

- **இந்தியப் பெருங்கடல் கரையோர சங்கத்தின் (IORA) கீழ் அடங்கும் நாடுகளிடையே விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் புத்தாக்க பணிக்குழுவின் (WGSTI) செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல்**

  இலங்கை IORA செயலகத்தின் உறுப்பு நாடாகும், இது விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் புத்தாக்கத்திற்கான பணிக்குழுவின் (WGSTI) செயல்பாட்டு அமைப்பின் கீழ் செயல்படுகிறது. IORA பணித் திட்டத்தின்படி, இலங்கை பின்வரும் 02 கருத்துக் குறிப்புகளை IORA செயலகத்திற்கு சமர்ப்பித்தது. இலங்கைக்கு பொருத்தமான கடல் ஆராய்ச்சி பகுதிகளை அடையாளம் காண 04 கூட்டங்கள் நடத்தப்பட்டன. கடல் ஆராய்ச்சி கருத் திட்டங்கள் குறித்து சமுத்திர பல்கலைக்கழகம் மற்றும் தேசிய நீர்வாழ் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (NARA) ஆகியவற்றினால் தயாரிக்கப்பட்ட 02 கருத்துக் குறிப்புகள் நிறைவு நிலைக்கு கொண்டுவரப்பட்டன. இந்தக் கருத்துக் குறிப்புகள் IORA செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு, அனைத்து உறுப்பு நாடுகளுடனும் அவர்களின் உள்ளீடுகளுக்காகப் பகிரப்பட்டன. அதன்படி, IORA செயலகம் 24.10.2024 அன்று கருத்துக் குறிப்புகளை அங்கீகரித்தது. தற்போது, மேற்கூறிய 02 ஆராய்ச்சி திட்டங்களுக்கான பாதீட்டு மதிப்பீடு நிறைவு நிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும், IORA வில் இலங்கையின் தலைமைப் பொறுப்பு தொடர்பான பணிகள் ஒருங்கிணைக்கப்பட்டன.

  இலங்கையில் 02 கடல்சார் ஆராய்ச்சிகள் தொடர்பான 02 கருத்துக் குறிப்புகளுக்கு IORA செயலகம் ஒப்புதல் பெற்றுள்ளது.

- **BIMSTEC TTF நிறுவுதல்கள் தொடர்பான பணிகளை ஒருங்கிணைத்தல் BIMSTEC இன் கீழ் 02வது EG-STIC ஐ முன்னெடுத்தல்**

  விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் புத்தாக்க ஒத்துழைப்புக்கான BIMSTEC நிபுணர் குழுவின் (EG-STIC) இரண்டாவது கூட்டம் 2024, ஜூலை 25-26, ஆம் திகதிகளில் இலங்கையில் கொழும்பில் இடம் பெற்றது. இந்தக் கூட்டத்தில் முதல் பயிற்சி முகாமுக்கான கருத்துரு, பிம்ஸ்டெக் நாடுகளின் மதிப்பீடுகள் மற்றும் ஒரு தொடக்க மாநாட்டை நடத்துவதற்கான இந்தியாவிடமிருந்தான கோரிக்கை ஆகியவை கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

  BIMSTEC தொழினுட்ப பரிமாற்ற வசதியை (BIMSTEC TTF) நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2022 இல் 05 வது BIMSTEC மாநாட்டில் கையெழுத்தானது, ஆனால் நேபாளத்தில் உள்ளக உத்தியோகபூர்வ நடைமுறைகள் முழுமையடையாததால் அது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. வெளிவிவகார அமைச்சு (MoFA) மற்றும் BIMSTEC செயலகம் மூலம் செயல்முறையை விரைவுபடுத்த கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

- **ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முதலீட்டு கட்டமைப்பை (NRDF) செயல்படுத்துதல்**

  தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சட்டகத்தின் (NRDF) கீழ், நாட்டின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி துறையின் முன்னேற்றத்திற்குத் தேவையான முறைகள் மற்றும் திட்டங்கள் அடையாளம் காணப்படுகின்றன. 2024 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் விவரங்கள் மற்றும் முன்னேற்றம் பின்வருமாறு அமைகிறது.

  இலங்கையில் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்திற்கான தெளிவான தொலைநோக்கு மற்றும் மூலோபாய திசையை பின்பற்றும் நோக்கத்துடன் தேசிய ஆராய்ச்சி சாலை வரைபடத்தை உருவாக்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.இந்த முன்முயற்சியின் கீழ், ஆராய்ச்சியாளர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளை ஒன்றிணைத்து ஒரு பொதுவான தளத்தை உருவாக்க ஆர்வத்தின் வெளிப்பாடுகளுக்கு (EoI) அழைப்பு விடுக்கப்பட்டது. அமைச்சகம் பல்வேறு துறைகளில் இருந்து 111 விண்ணப்பங்களைப் பெற்றது, அதிலிருந்து 70 விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 12 துறைகளில் வகைப்படுத்தப்பட்டனர்.

  2024 ஆம் ஆண்டில், தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சட்டகத்தின் (NRDF) இன் கீழ் நான்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இதில் 2024.04.03 அன்று தேசிய புத்தாக்க முகவராண்மையுடன் (NIA) இணைந்து, முன்னெடுத்த திட்டங்களுக்குள் அறிவுசார் சொத்துரிமைகளை நிர்வகிக்கும் போது ஆராய்ச்சி பெறுபேறுகளினை வணிகமயமாக்குவதில் கவனம் செலுத்துதல் பற்றிய திட்டம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை திறம்பட நிர்வகிக்க செயல்திறன் குறிகாட்டிகளைப் பயன்படுத்துவது குறித்து அமைச்சக ஊழியர்களுக்கான இரண்டு கட்டங்களினை கொண்ட திட்டம், மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான இறக்குமதிகளுக்கான தனிப்பயன் இறக்குமதி அனுமதி நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வு திட்டம் ஆகியவை அடங்கும். இந்த முயற்சிகள் தேசிய பொருளாதார வளர்ச்சியுடன் ஆராய்ச்சி முயற்சிகளை ஒருங்கிணைப்பதையும் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளில் செயல்திறன் மதிப்பீட்டை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தன.

- **நவீன விஞ்ஞான அறிவை மேம்படுத்துவதற்காக வித்யா மின் செய்தி வலைத்தளத்தைப் பராமரித்தல் மற்றும் வித்யா மின் செய்தி கட்டுரைப் போட்டியை ஏற்பாடு செய்தல்.**

  2022 ஆம் ஆண்டில் மும்மொழி தளமாக தொடங்கப்பட்ட வித்யா மின் செய்தி வலைத்தளமானது (www.vidyaenews.mostr.gov.lk), 2023 ஆம் ஆண்டுக்குள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் 200க்கும் மேற்பட்ட அறிவார்ந்த கட்டுரைகளை வெளியிட்டுள்ளது, 2024 ஆம் ஆண்டின் இறுதியில் 100 க்கும் மேற்பட்ட கட்டுரைகள் சேர்க்கப்பட்டன. செயற்கை நுண்ணறிவு, புனை மெய்யாக்கம், வானியல் மற்றும் நனோ தொழினுட்பம் போன்ற துறைகளிலிருந்து அறிவானது, முகப்புத்தகம் மற்றும் யூடியூப் வழியாக பகிரப்படும், அதே வேளையில் மாணவர்கள் மற்றும் பொதுமக்களை ஈடுபடுத்தும் வருடாந்திர கட்டுரைப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டு மதிப்பாய்வு முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்த வலைத்தளம் அரசாங்க அறிவியல் அறிவு வளங்களை அணுகுவதற்கான ஒரு தளமாக செயற்படுவதுடன் மதிப்பீட்டு செயல்பாட்டில் பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் நிபுணர்கள் உள்ளடங்குவர்.

➢ **நிறுவன நிர்வாகம் மற்றும் செயல்பாடுகளை எளிதாக்குதல்**

- நிலம் மற்றும் கட்டிடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வசதிகள் திட்டத்தின் கீழ் 3 நிலப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன.

- நனோ தொழினுட்ப பூங்காவின் உரிமையை 99 ஆண்டு குத்தகை முறையின் கீழ் இலங்கை வரையறுக்கப்பட்ட நனோ தொழினுட்ப நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்கு நகர்ப்புற மேம்பாட்டு அதிகாரசபையுடன் இணைந்து தேவையான பணிகள் நிறைவு செய்யப்பட்டன.

- SLINTEC மற்றும் SLIBTEC இடையே சொத்துக்களினை பகிர்தல்
  - SLINTEC மற்றும் SLIBTEC க்கு இடையிலான சொத்து பகிர்வு தொடர்பில் நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கையின் கௌரவ அமைச்சர் அவர்களால் CP/24/0407/604/050 எனும் இலக்கத்தினையும் 20.02.2024 திகதியினையும் கொண்டு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் தொடர்பாக, CGO/ASM/EDU/Building/01 எனும் இலக்கத்தினையும் 26.09.2023 எனும் திகதியினையும் கொண்ட கடிதத்தின் மூலம் கணக்காய்வாளர் நாயகத்தினால் முன்வைக்கப்பட்டதும் 26.09.2023 எனும் இலக்கத்தினை கொண்டதுமான தீர்மானத்தினை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

➢ **புத்தாக்க சுற்றுச்சூழல் அமைப்பின் ஒருங்கிணைப்பு**

- புத்தாக்க சுற்றுச்சூழல் அமைப்பை ஒருங்கிணைப்பதற்காக 10 விஞ்ஞான மற்றும் தொழினுட்ப நிறுவனங்களுக்கு விஜயம் செய்ததுடன், தற்போதைய செயல்பாடுகள், எதிர்கால மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் அவற்றை வலுப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

- புத்தாக்க சுற்றுச்சூழல் மேம்பாட்டு பணிக்குழு (IEET) தாபிக்கப்படல்.

- ஆராய்ச்சி மற்றும் கைத்தொழில் கூட்டமைப்பு மன்றத்தை (RISF) நடத்துவதற்கான திட்டங்களைத் தயாரித்து நிறைவு செய்தல்.

- பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் விஞ்ஞானம் மற்றும் புத்தாக்கங்களினை மேம்படுத்துவதற்கான 6 திட்டங்களின் ஆரம்ப நடவடிக்கைகளுக்குத் தேவையான உதவிகளை வழங்குதல்.

➢ **விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் புத்தாக்க துறைகளுக்கான செயல்படுத்தல் பொறிமுறை மற்றும் மூலோபாயத் திட்டத்தை உருவாக்குதல்.**

இந்த முயற்சியின் கீழ், விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பத் துறை தொடர்பான சட்டங்களில் திருத்தங்கள் செய்யப்பட்டன. மேலும், BICOST-X ஐப் பயன்படுத்தி, விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பத் துறைக்கு ஒரு பயனுள்ள மூலோபாயத் திட்டத்தை அறிமுகப்படுத்த தேசிய விஞ்ஞான மற்றும் தொழினுட்ப ஆணைக்குழுவுடன் நெருக்கமாகப் பணியாற்றினேன்.

➢ **தேசிய விஞ்ஞா நிலையத்தை (NSC) நிறுவுவதற்கு வசதி செய்தல்.**

ஹோமகமவில் உள்ள பிடிபனவில் உள்ள தொழினுட்ப பூங்காவில் உள்ள நிலத்துடன் மேலதிகமாக, கொழும்பு புறநகர்ப் பகுதிகளில் மாற்று இடங்கள் ஆராயப்பட்டன, நிதி உதவி பெறுவதற்காக வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் வெளிவிவகாரத் திணைக்களத்துடன் தொடர்ந்து ஒருங்கிணைப்பானது பேணப்பட்டது. மேலும் வெளிநாட்டு நிதியைக்கோரி பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

➢ **உரம் மற்றும் மண் முகாமைத்துவத்தின் மூலம் தரம் குறைந்த மண்ணின் தரத்தை மேம்படுத்துதல்.**

தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவனத்தின் நுண்ணுயிர் உயிரி தொழினுட்ப பிரிவானது , பாராளுமன்றத்தின் உணவுப் பாதுகாப்பு மற்றும் விவசாயம் தொடர்பான திணைக்களத்தின் மேற்பார்வைக் குழுவுடன் இணைந்து, 'உயிர் உரங்களைப் பயன்படுத்தி தரம் குறைந்த மண்ணினது தரத்தினை மேம்படுத்துதல்' எனும் திட்டத்தை 'சுற்றுச்சூழலுக்கு உகந்த உரங்கள் குறித்த தேசிய திட்டமாக' நடைமுறைப்படுத்தியது. 2024 யாலசிறுபோக பருவத்தில், இந்தத் திட்டம் தீவு முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு நெல் எவ்வாறு பயிரிடுவது என்பதைக் காண்பிக்கும். இந்த செயல்விளக்கங்கள் நுண்ணுயிர் உயிரிப்படல உயிரி உரங்களை (BFBFs) கலப்பின மற்றும் கரிம துகள் உரங்களுடன் இணைக்கும் புதிய உர தொழினுட்பத்தைப் பயன்படுத்தும். இந்த அணுகுமுறை இரசாயன உர பயன்பாட்டை 50% குறைத்து நெல் தானிய விளைச்சலை 20-30% அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. SOC அறிவுறுத்தல்களின் இந்த திட்டம் ஏழு மாகாணங்களிலும், மூன்று மகாவலி அமைப்புகளிலும் நடத்தப்பட்டது, 100% இரசாயன உரங்களை மட்டும் பயன்படுத்தும் வழக்கமான நடைமுறையுடன் ஒப்பிடுகையில், சுமார் 90% இடங்களில், புதிய உர தொழினுட்பத்துடன் நெல் விளைச்சல் அதிகரித்துள்ளதாக பெறுபேறுகள் காட்டுகின்றன. நாட்டில் சுற்றுச்சூழலுக்கு உகந்த புதிய உர தொழினுட்பங்களில் நடத்தப்பட்ட மிகப்பெரிய களத்திட்டம் இதுவாகும். பொது-தனியார் கூட்டாண்மையில் தனியார் துறையுடன் இந்த திட்டத்தை நாடு முழுவதும் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் விவசாய அமைச்சு மற்றும் விவசாயத் திணைக்களம், மகாவலி அதிகாரசபை, மாகாண விவசாயத் திணைகளங்கள் உள்ளிட்ட விவசாயத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து பங்குதாரர்களும் பங்கேற்கின்றனர்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் பயிர் விளைச்சல் அதிகரிப்பதால், நெல் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.30,000-40,000 மேலதிக இலாபம் கிடைக்கும் என்பதுடன் இரசாயன உர

இறக்குமதியைக் குறைப்பதன் மூலம் நாடு ஆண்டுதோறும் ரூ.30 பில்லியனுக்கும் அதிகமான அந்நியச் செலாவணியைச் சேமிக்க முடியும். தற்போது, நாட்டில் சுமார் 20,000 ஏக்கர் நெல் இந்த சுற்றுச்சூழலுக்கு உகந்த உரங்களைப் பயன்படுத்தி பயிரிடப்படுகிறது, மேலும் இதனை ஏனைய பயிர்களுக்கும் அறிமுகப்படுத்தல் வேண்டும்.

- **இலங்கை கோள் மண்டலம்**

இலங்கை கோள்மண்டலமே இலங்கையில் உள்ள ஒரே கோள் மண்டலம் என்பதுடன் இது 1965 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இதன் குறிக்கோள் வானியல் அறிவைப் பிரபலப்படுத்தும் முக்கிய நோக்கத்துடன் நிறுவப்பட்டது. இது உலகின் மிகப்பெரிய கோள் மண்டலங்களில் ஒன்றாகும், 23 மீ விட்டத்தினை கொண்ட குவிமாடத்தினை கொண்ட இந்த கோள்மண்டலமானது ஒரு அமர்வுக்கு 560 பார்வையாளர்களை அமர வைக்கும் திறன் கொண்டது. 58 ஆண்டுகளில், இலங்கை பாடசாலை பிள்ளைகள் மற்றும் பொதுமக்களிடையே அறிவு தேடுபவர்களின் ஆர்வத்தை திருப்திப்படுத்த கோள் மண்டல விளக்கக்காட்சிகள், வெளிப்புற நிகழ்ச்சிகள் மற்றும் வானியல் கற்கைகளினை நடத்துவதன் மூலம் இலங்கை கோள் மண்டலம் அதன் நோக்கங்களை அடைந்துள்ளது. 2014 ஆம் ஆண்டில் பிரபஞ்சத்தை ஒரு 3D யின் மூலம் வெளிப்படுத்த 4D/டிஜிட்டல் முழு குவிமாடம் ப்ரொஜெக்டரை நிறுவுவதன் மூலம் கோள் மண்டலம் தரமுயர்த்தப்பட்டது. சமீபத்தில் சேர்க்கப்பட்ட தொழினுட்ப பூங்கா அதன் பார்வையாளர்களுக்கு பௌதீகவியல் நிகழ்வுகளின் நிகழ்நேர அனுபவத்தை வழங்குகிறது. இரவு வான கண்காணிப்பு முகாம்கள், அபூர்வமாக இடம்பெறும் இயற்கை நிகழ்வுகளின் கண்காணிப்பு முகாம்கள், வானியல் பட்டறைகள், அறிவியல் கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நாடு முழுவதும் நடத்தப்படுகின்றன. மேலும், வானியல் கற்கைகள் மற்றும் வெளிப்புற நிகழ்ச்சிகள் முற்றிலும் இலவசமாக நடத்தப்படுகின்றன. இந்த நடவடிக்கைகள் அனைத்தும் தனிப்பட்ட அனுபவத்தின் மூலம் பொதுமக்களுக்கு வானியல் மீதான ஆர்வத்தைத் தூண்டுவதற்காக நடத்தப்படுகின்றன.

- கோள் மண்டல விளக்கக்காட்சிகள்

  கோள் மண்டல விளக்கக்காட்சியில் டிஜிட்டல் முழு-குவிமாட படங்கள், சூரிய குடும்பத்திற்கான அறிமுகம் மற்றும் இரவு வானத்தின் செயல் விளக்கம் ஆகியவை அடங்கும். இந்த நிகழ்ச்சிகள் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் விண்வெளி பற்றி மேலும் அறிய அனுமதிக்கின்றன

- வெளிப்புற நிகழ்ச்சித்திட்டங்கள்

  1. வானியல் தொடர்பிலான அறிவினை மேலும் வளர்ப்பதற்கும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் கண்காணிப்பு திறன்களை மேம்படுத்துவதற்கும் நாடு முழுவதும் இரவு வான் கண்காணிப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. வெற்றுக் கண்ணாலும் மற்றும் தொலைநோக்கிகளினை பயன்படுத்தியும் இந்த வகையான நிகழ்ச்சிகள் அவதானிக்கப்படுவதன் மூலம் அவை வானப் பொருட்களின் நேரடி அனுபவங்களினை வழங்குகின்றன.

  2. சூரிய கிரகணம், சந்திர கிரகணம், வால் நட்சத்திரங்கள், புதன் அல்லது வெள்ளி பெயர்ச்சி போன்ற இயற்கை நிகழ்வுகள் நிகழும்போது இலங்கை கோள்மண்டலமானது அதனை அறியப்படுத்தும் வகையில் முகாம்களை ஏற்பாடு செய்து வருகிறது. இதுபோன்ற நிகழ்வுகளில் ஒரு சில வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே நிகழும் என்பதால், அவற்றைக் கவனிக்க எங்களுடன் ஈடுபடுவதில் இலங்கையர்கள் மிகவும் ஆர்வமாக உள்ளனர்.

  3. இலங்கை கோள் மண்டலமானது, வானியற்பியலுடன் தொடர்புடைய பௌதீகவியலை பிரபலப்படுத்துவதற்காக இரண்டாம் நிலை மாணவர்களுக்கும் வானியல் தொடர்பான செயல்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் படைப்பாற்றல் திறனை மேம்படுத்த தொடக்க நிலை மாணவர்களுக்கும் வகுப்புகள் மற்றும் பட்டறைகளை நடத்தி வருகிறது. வருகிறது. இவ்வாறான திட்டங்களினை முன்னெடுப்பதன் மூலம், உயர் கண்காணிப்பு திறன்கள் மற்றும் உயர் படைப்பு சிந்தனையுடன் அடுத்த தலைமுறை வானியலாளர்களை உருவாக்குவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

  4. பிரபஞ்சத்தில் வானியல் நிகழ்வுகளை விளக்குவதற்கும், கோள்மண்டல பார்வையாளர்களுக்கு அந்த நிகழ்வுகளின் உண்மையான அனுபவத்தை வழங்குவதற்கும் மிகவும் பயனுள்ள வழிமுறைகளில் ஒன்றாக தொழினுட்ப பூங்கா நிறுவப்பட்டுள்ளது. இந்த வசதி CECB ஆல் ஆதரிக்கப்பட்டது.

பாடசாலை பிள்ளைகள் மற்றும் பொதுமக்களிடையே விஞ்ஞானத்தை பிரபலப்படுத்த பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

| நிகழ்ச்சித்திட்டம் | இலக்கு 2024 | | சாதனை 2024 | |
|---|---|---|---|---|
| | நிகழ்ச்சித் திட்டங்கள் | பயனாளிகள் | நிகழ்ச்சித் திட்டங்கள் | பயனாளிகள் |
| 1. கோள் மண்டல காட்சிகள் | 400 | 250,000 | 493 | 227,931 |
| 2. வெளிப்புட நிகழ்ச்சித்திட்டங்கள் | 35 | 35,000 | 25 | 25,631 |
| 3. வானியல் பற்றிய கற்கை நெறிகள் | 3 | 150 | 2 | 75 |
| 4. வருமானம் (ரூபாய் . மில்லியன் ) | 30.00 | | 25.12 | |

- **விதாதா நிகழ்ச்சித்திட்டம்**

2024 ஆம் ஆண்டில், தொழில்துறை அமைச்சின் ஒரு பகுதியாக, விதாதா பிரிவானது, உணவு மற்றும் பானங்கள், மசாலாப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள், இரசாயனம் மற்றும் மூலிகைப் பொருட்கள், நல்ல உற்பத்தி நடைமுறைகள் (GMP) சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் தர சோதனை அறிக்கைகள் போன்ற துறைகளில் கவனத்தை செலுத்தியது. தகுதியான தொழில்முனைவோருக்கு இந்த சேவைகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட ரூ. 10 மில்லியனில் மொத்தம் ரூபாய் 9.78 மில்லியன் செலவிடப்பட்டது. "உள்ளூர் பல்பொருள் அங்காடி சங்கிலிகள் மற்றும் ஏற்றுமதி சந்தைகளுக்கு தயாரிப்புகளை வழங்குவதற்கு சாத்தியம் மிகுந்த நுண் மற்றும் சிறு அளவிலான கைத்தொழிற்துறையாளர்களுக்கு வலுவூட்டுதல்" என்ற திட்டத்தின் கீழ், 2024 ஆம் ஆண்டில் தொழில்முனைவோருக்கு 237 சோதனை அறிக்கைகள் மற்றும் 36 GMP சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

விதாதா பிரிவானது, தனியார் துறையில் கைத் தொழினுட்ப நிறுவனம் (ITI) மற்றும் இலங்கை தரநிலைகள் நிறுவனம் போன்ற (SLSI) தகுதிவாய்ந்த நிறுவனங்களுடன் இணைந்து சோதனை அறிக்கைகள் மற்றும் GMP களை வழங்கி, கிராமப்புற மட்டத்தில் உற்பத்தி செய்யும் பொருட்களின் தயாரிப்பு தரம் மற்றும் தரத்தை உறுதி செய்கிறது.

தொழில்முனைவோரை ஊக்குவிப்பதிலும் சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்துவதிலும் உற்பத்தியினை தரப்படுத்தல் முக்கிய பங்கு வகிக்கிறது.

- **தொழில்முனைவோருக்கான சந்தை மற்றும் விற்பனை மேம்பாட்டுத் திட்டங்கள்.**

  நாடு முழுவதும் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோரை (MSMES) ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்ட மாவட்ட அளவிலான வர்த்தக கண்காட்சிகளை நடத்துவதற்கு ரூ. 4 மில்லியன் தொகை பாதீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வர்த்தக கண்காட்சிகள் விற்பனையை ஊக்குவிக்கவும், தொழில்முனைவோர் தங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை காட்சிப்படுத்த ஒரு தளத்தை வழங்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

  இன்றுவரை, 21 வர்த்தக கண்காட்சிகள் நிறைவடைந்துள்ளன, இதனால் 1,372 தொழில்முனைவோர் பயனடைகின்றனர். மாவட்ட செயலக மட்டத்தில் இந்த நிகழ்வுகளை ஏற்பாடு செய்ய மொத்தம் ரூபாய் 2.80 மில்லியன் பயன்படுத்தப்பட்டுள்ளது. MSMES இன் வளர்ச்சியை ஆதரிப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் ஒரு தொழில்முனைவோரின் கோப்பகம் தொகுக்கப்பட்டுள்ளது. இந்த கோப்பகமானது நாடு முழுவதும் உள்ள 500 தொழில்முயற்சிகளினது வணிக நிலைகள் பற்றிய தகவல்களை வழங்குகிறது அவற்றின் விற்பனை ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக. இந்த கோப்பகத்தின் மின் புத்தக பதிப்பு நிறைவடைந்துள்ளது..

- **தொழினுட்ப பரிமாற்ற திட்டங்கள்**

  இந்த ஆண்டு தொழில்முனைவோருக்கான கீழ் குறிப்பிடப்பட்ட தொழினுட்ப பரிமாற்ற திட்டங்களை விதாதா பிரிவு நடத்தியது.

  மசாலா சார்ந்த பொருட்கள், தூய்மை படுத்துவதற்கு பயன்படுத்தும் பொருட்கள், காளான் தொடர்பான பொருட்கள், மீனின் பெறுமதியினை கூட்டல் மற்றும் பிற உணவு மதிப்பு கூட்டல் தயாரிப்புகளை மையமாகக் கொண்ட தொழினுட்ப பரிமாற்றம் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மொத்தம் 34 திட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த முயற்சிகளின் ஊடாக 1,716 பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்கான பாதீட்டு ஒதுக்கீடு ரூபாய் 7.5 மில்லியன் மற்றும் இது தொடர்பிலான செலவு ரூபாய் 0.6 மில்லியன்.

  தொழினுட்ப பரிமாற்றம் மூலம் 1,716 சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோரை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இந்த திட்டம் தொடர்பிலான, அமர்வுகள் வெற்றிகரமாக பூரணப்படுத்தப்பட்டதுடன் இதற்கான பாதீட்டு ஒதுக்கீடு ரூபாய் 7.5 மில்லியன் மற்றும் இது தொடர்பிலான செலவு ரூபாய் 0.6 மில்லியன்.

மேலும், தேங்காய், கித்துல் மற்றும் பனை தொழில்களை மையமாகக் கொண்ட 11 திட்டங்கள் தொடர்பில் 525 பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்கான பாதீட்டு ஒதுக்கீடு ரூபாய் 6.0 மில்லியன் மற்றும் இது தொடர்பிலான செலவு ரூபாய் 2.54 மில்லியன்.

- உலகளாவிய தொழில்முனைவோர் வாரத்திற்கு இணையாக, நாடு முழுவதும் 75 சிறப்பு பயிற்சி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், ரூ.7.0 மில்லியனுக்குள் நுண்-நிலை தொழில்முனைவோரை சிறு-நிலை தொழில்முனைவோராக மேம்படுத்துதல் நிமித்தம் 3 திட்டங்கள் நடத்தப்பட்டன. இது தொடர்பில் ரூபாய் 1.64 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

- காய்கறிகள், பச்சை இலைகள் மற்றும் பழங்களைப் பாதுகாத்தல் மற்றும் நீரிழப்பு செய்தல் குறித்த பயிற்சித் திட்டத்தின் கீழ், 7 திட்டங்கள் நடத்தப்பட்டன. பயிற்சி பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை 214 ஆகும். இது தொடர்பில் ஒதுக்கீட்டு செய்யப்பட்ட தொகை ரூபாய் 7.23 மில்லியன் ஆகும். செலவிடப்பட்ட தொகை ரூபாய் .0.67 மில்லியன் ஆகும்.

- தொழில்முனைவோருக்கு புதிய வாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கத்துடன், கண்ணாடி ஊதுதல் மற்றும் இயற்கை மலர் பாதுகாப்புக்கான புதிய தொழினுட்ப பயிற்சித் திட்டங்கள் என்ற வகையில் 05 திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. இதன் கீழ் 98 பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. தொழினுட்ப சிக்கல்கள் காரணமாக களனி பல்கலைக்கழகத்தின் தேசிய கண்ணாடி ஊதுதல் மையத்தினால் ஆரம்பத்தில் ஒப்புக்கொண்டபடி திட்டத்தைத் தொடர இயலவில்லை.

- புடவை மற்றும் ஆடைத் துறையின் தரத்தை மேம்படுத்த, இலங்கை ஜவுளி மற்றும் ஆடை நிறுவனத்துடன் பயிற்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதன் கீழ் 7 திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. இத்திட்டங்கள் தொடர்பில் ஒதுக்கப்பட்ட ரூபாய் 9.5 மில்லியனுக்குள் 118 பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது, மேலும் இது தொடர்பில் ரூபாய் 3.42 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

- **வாண்மை விருத்தித் திட்டங்கள்**

கிராமப்புற தொழில்முனைவோருக்கு ஏற்ற வகையிலான தொழினுட்பங்கள் கிடைக்கப்பெறுவதனை மேம்படுத்துவதற்காக, பயனுள்ள தொழினுட்ப பரிமாற்றத்திற்கான வளக் குழுவை உருவாக்குவதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. விதாதா பிரிவில் உள்ள விஞ்ஞான மற்றும் தொழினுட்ப அலுவலர்களின் திறன் மேம்பாடு மூலம் இது நிறைவேற்றப்படும். இதுவரை, 167 அலுவலர்கள் பால் சார்ந்த பொருட்கள் மற்றும் உணவு மதிப்பு கூட்டலில் பயிற்சி பெற்றுள்ளனர். அதே நேரத்தில் 77 அலுவலர்கள் தூய்மை படுத்துவதற்கு பயன்படுத்தும் பொருட்கள் சார்ந்த தயாரிப்புகளில் பயிற்சி பெற்றுள்ளனர். இத்திட்டங்கள் தொடர்பில் ரூபாய் 4.00 மில்லியன் பாதீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது, அத்துடன் ஏற்கனவே ரூபாய் 3.33 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

- விதாதா அதிகாரிகளுக்கான திறன் மேம்பாடு திட்டங்கள் தொடர்பில் (வணிகத் திட்டம் தயாரித்தல் மற்றும் திட்ட முன்மொழிவு எழுதுதல்) ரூபாய் 3.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூபாய் 0.84 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் 2 பட்டறைகள் நடத்தப்பட்டு 304 அலுவலர்கள் பங்கேற்றனர்.

- விதாதாபிரிவினை சார்ந்த ஊழியர்களுக்கான திறன் மேம்பாடு திட்டங்கள் தொடர்பில் ரூ.பாய் 5.00 மில்லியன் ஒதுக்கப்பட்டு அதில் ரூபாய் 1.01 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் 7 திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், 304 அலுவலர்கள் பயனடைந்துள்ளனர்.

### 2.2. 2025ஆம் ஆண்டிற்கான இலக்குகள்

- விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பக் கொள்கையுடன் ஒத்துப்போகும் வகையில் ஒரு தேசிய ஆராய்ச்சி வரைபடத்தைத் தயாரித்து தொடர்புடைய திட்டங்களை ஒழுங்கமைத்தல்.
- வித்யா மின் செய்திகள் வலைத்தளத்தைப் பராமரித்தல், வித்யா மின் செய்திகள் கட்டுரைப் போட்டியை ஏற்பாடு செய்தல் மற்றும் குடிமைகளின் விஞ்ஞான எழுத்தறிவை அளவிடுவதற்கான தேசிய கணக்கெடுப்பை நடத்துதல். விஞ்ஞான எழுத்தறிவை மேம்படுத்த தேசிய விஞ்ஞான தினம்/வாரம் உள்ளிட்ட விஞ்ஞான மேம்பாட்டுத் திட்டங்களைக் கண்காணித்து ஒருங்கிணைத்தல்.

- அரசாங்க நிதியுதவி மற்றும் கூட்டு ஆராய்ச்சிக்கான தேசிய ஆராய்ச்சி முகாமைத்துவ தகவல் அமைப்பை நிறுவுதல் மற்றும் நிர்வகித்தல். நடைமுறையில் உள்ள ஆராய்ச்சி திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்வு செய்தல், 2025 ஆம் ஆண்டுக்கான ஆராய்ச்சித் திட்டத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் 2026 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர ஆராய்ச்சித் திட்டத்தைத் தயாரித்தல். முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை எண். 02/2014 இன் படி கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு ஆராய்ச்சி திட்டங்களை மதிப்பாய்வு செய்தல்.
- இந்திய-இலங்கை கூட்டு ஆராய்ச்சித் திட்டத்தின் (2019 மற்றும் 2024 முயற்சிகள்) கீழ் ஆராய்ச்சி திட்டங்களுக்கு மானியங்களை வழங்குதல் மற்றும் முன்னேற்ற மதிப்பாய்வுகளை நடத்துதல்.
- விஞ்ஞான மற்றும் தொழினுட்ப ஒத்துழைப்புக்கான புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடுதல் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்துள்ள நாடுகளுடன் கூட்டுக் குழு கூட்டத்தை நடத்துதல்.
- BIMSTEC தொழினுட்ப பரிமாற்ற வசதி மற்றும் அணு ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய அமைப்பு (CERN) தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.
- சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்குள் விஞ்ஞான மற்றும் தொழினுட்ப சுற்றுச்சூழல் அமைப்பை வளர்க்கும் நோக்குடன், பல்கலைக்கழக ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் கல்வி அமைப்புகளுடன் இணைந்து நாடு முழுவதும் அடைகாக்கும் மையங்களின் வலையமைப்பை நிறுவுவதற்கான திட்டங்களினை முன்னெடுத்தல்.
- மனித வளங்கள், பௌதீகவியல் உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை உள்ளடக்கிய விதாதா அலகு தரவுத்தளத்தின் தொடர்ச்சியான மேம்பாடு மற்றும் பராமரிப்பு.
- பாடசாலை பிள்ளைகள் மற்றும் பொதுமக்களுக்கான கோள்மண்டல விளக்கக்காட்சிகளின் எண்ணிக்கையை 450 ஆக அதிகரித்தல்.
- கிராமப்புறங்களில் நடத்தப்படும் வெளிப்புற நிகழ்ச்சிகளின் எண்ணிக்கையை 40 ஆக அதிகரித்தல்.
- கோள்மண்டல வானியல் பாடநெறிகளில் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை - 200.
- கோள்மண்டல விளக்கக்காட்சிகள் மூலம் ஆண்டு வருமானம் ரூ (மில்லியன்) - 30.00 மற்றும் நிகழ்நிலை அடிப்படையில் முன்பதிவு முறையை நிறுவுதல்.
- கோள்மண்டல விளக்கக்காட்சிகளில் பயன்படுத்த முழு-குவிமாட பட தரவுத்தளத்தை மேம்படுத்துதல்.
- தொலைநோக்கிகளை பைனாகுலர், ஆஸ்ட்ரோ கேமரா மற்றும் சூரிய படலங்கள் மூலம் மேம்படுத்தி, புதிய மொபைல் கோள்மண்டலத்தை வாங்கவும்.
- கோள்மண்டல கட்டிடத்தை மீண்டும் வர்ணம் பூசி புதுப்பித்தல், நூலகக் கட்டிடத்தின் கூரையை சூரிய ஒளி ஆய்வகமாகப் புதுப்பித்தல், தொழினுட்பப் பூங்காவைப் புதுப்பித்தல், கழிப்பறை அமைப்பைச் சரிசெய்தல்.

**2.3. சவால்கள்**

- புதுப்பிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் உத்திகள் இல்லாததால், நாட்டில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு தனியார் துறை பங்களிப்புகள் தடைபடுகின்றன.
- மூளை வடிகால் மற்றும் ஆட்சேர்ப்பு சிக்கல்களால் குறைந்த எண்ணிக்கையிலான ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளே தேவைக்கு உளதாக இருக்கின்றனர்.
